# O.S.No.6/2018

PW1 **ஜெயப்பிரதா** நாள் 13.12.2023

**1 , 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

என்னுடைய பெயர் ஜெயப்பிரதா தான். ஜெயசுதா அல்ல. நான் தாக்கல் செய்துள்ள வாரிசுகள் பட்டியலில் என்னுடைய பெயர் ஜெயசுதா என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அது தவறு. நான் தான் ஜெயப்பிரதா என்பதற்கான அடையாள அட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் தான் ஜெயப்பிரதா என்பதற்கான அடையாள அட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2–ம் பிரதிவாதி ஜெயபிரகாஷ் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்தேன். 4–ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் 4–ம் பிரதிவாதிக்கும், 2–ம் பிரதிவாதிக்கும் ஏற்பட்ட திருமண உறவில் நான் பிறக்கவில்லை என்று கூறியிருப்பதை தெரிந்துகொண்டேன். 4–ம் பிரதிவாதியுடன் திருமணம் ஆகும் வரையில் ஒன்றாக தான் இருந்தேன். எனக்கும் அவருக்கும் பேச்சுவார்த்தை உள்ளது. 2–ம் பிரதிவாதி 26.04.1990 ல் எனது தாயாருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு எனக்கு தெரியும் என்றால் சரிதான். அதற்கு என் தாயார் சாந்தி பதில் அனுப்பியது எனக்கு தெரியும். ஜெயபிரகாஷ் அனுப்பிய அறிவிப்பு சங்கதிகள் மற்றும் என் தாயார் அனுப்பிய பதில் அறிவிப்பில் உள்ள சங்கதிகளும் எனக்கு தெரியும். 06.09.1992 அன்று நான் பிறந்தேன். 2–ம் பிரதிவாதியும், 4–ம் பிரதிவாதியும் 1990 முதல் பிரச்சனை செய்துகொண்டு ஒன்றாக இல்லாமல் இருந்த நிலையில் நான் 1992 ல் பிறக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. ஊர்காரர்கள் என் வீட்டு பெரியவர்களும் என் அப்பா, அம்மாவை ஒன்றாக சேர்த்து வைத்தார்கள். வழக்குரையிலும், இது சம்பந்தமாக நான் எதுவும் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஜெயபிரகாஷ்யுடைய தந்தை இறந்து 3 மாதங்கள் கழித்து இந்த வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஜெயபிரகாஷ்யுடைய தந்தை உயிருடன் இருந்த போது வழக்கு தாக்கல் செய்திருந்தால் என் தாயாருக்கும், தகப்பனாருக்கும் இடையே திருமண உறவு முறிவு ஏற்பட்டுள்ளது பற்றி அவர் கூறிவிடுவார் என்பதால் தான் அவர் இறந்த பிறகு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1989 ஆக்ஸ்ட் மாதம் முதல் என் தாயாருக்கும், ஜெயபிரகாஷ்க்கும் எந்த சம்பந்தமும், தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. சொத்தின் தன்மை மற்றும் அது பற்றிய முழு விவரங்கள் எனக்கு தெரியாது. சொத்தை நான் நேரில் சென்று பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்து எனது அனுபவத்தில் எப்போதும் இருந்ததில்லை என்று சொன்னால் சரிதான். சொத்து விவரங்களை அரசு

கணினி மூலம் தெரிந்து கொண்டேன். 2-ம் பிரதிவாதி, 1-ம் பிரதிவாதியின் கணவர் பெயரில் பட்டா இருந்ததால் தான் தாவா சொத்துக்களை தெரிந்து கொண்டேன் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு தெரிந்து கொண்டு தான் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். 1-ம் பிரதிவாதி பெயரில் உள்ள பி அட்டவணை சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள். அது அவரது கணவர் மூலமாக வந்தது. 1-ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயர் எனக்கு தெரியாது. 1-ம் பிரதிவாதியின் தகப்பனார் ராமசாமி கோனார் அவருக்கு பாத்தியப்பட்ட பி அட்டவணை சொத்துக்களை உயில் மூலம் 11.03.1987 ல் 1-ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. இந்த விவரங்கள் அனைத்தும் 2-ம் பிரதிவாதி அவருடைய எதிர்வழக்குரையில் சொல்லி தெரிந்துகொண்டு நான் வேண்டுமென்றே பொய் சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பி அட்டவணை சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் அல்ல என்றும், எனக்கு அதில் எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1-ம் பிரதிவாதியின் கணவர் அவருடைய மாமனாருக்கு எந்த ஒரு சொத்தும் வாங்கி கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்துக்கள் அனைத்திற்கும் வில்லங்க சான்றிதழ் வாங்கி பார்த்தேன். அதில் என்னென்ன சொத்துக்கு வில்லங்கம் போட்டுள்ளது என்று எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. வில்லங்க சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2-ம் பிரதிவாதி 1991 ல் பரிமளம் என்பவரை திருமணம் செய்துகொண்டார் என்றால் யாருக்கும் தெரியாமல் செய்துகொண்டார். திருமணம் செய்தது என் அம்மாவிற்கு எப்போது தெரியும் என்றால் வெகுநாட்களுக்கு பிறகு தெரியும். எவ்வளவு நாட்கள் என்று எனக்கு தெரியாது. நான் பிறப்பதற்கு முன்பாகவே 2-ம் பிரதிவாதி பரிமளத்தை திருமணம் செய்துகொண்டது என் அம்மாவிற்கு தெரியும். என் தாயார் 2-ம் பிரதிவாதி பரிமளத்தை திருமணம் செய்துகொண்டது சம்பந்தமாக அவர் பெயரிலோ, 1-ம் பிரதிவாதி பெயரிலோ, பரிமளம் பெயரிலோ எந்த குற்றவியல் நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. 2-ம் பிரதிவாதி பரிமளத்தை திருமணம் செய்த வகையில் 2 ஆண் பிள்ளைகள் மற்றும் 1 பெண் பிள்ளை உள்ளது என்று பிராதிலும் ஒப்புக்கொண்டுள்ளேன். 2-ம் பிரதிவாதி இறந்த பிறகு அவரது பிள்ளைகளை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். 2-ம் பிரதிவாதிக்கு அவரது பிள்கைள் சட்டப்பூர்வ வாரிசுகளாக இருக்கம் பட்சத்தில் அவர்களை தரப்பினராக சேர்க்காததால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பரிமாளவிற்கு பிறந்த பிள்ளைகளுக்கும் பாகம் உள்ளது. பி அட்டவணை சொத்து 1-ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்து என்ற

சொல்லியுள்ளேன். எந்த கிரையப்பத்திரத்தின் மூலம் கிரையம் பெற்றது என்று எனக்கு தெரியாது. 1989 ஆகஸ்ட் மாதத்திற்கு பிறகு எனது தாயார் தாவா சொத்துக்களை அனுபவவித்தது இல்லை என்று சொன்னால் சரிதான். 1,2,3 பிரதிவாதிகள் அ, ஆ அட்டவணை சொத்துக்கள் சம்பந்தமாக என்ன பரிவர்த்தனைகள் செய்துகொண்டார்கள் என்று எனக்கு தெரியாது. 2-ம் பிரதிவாதி தான் என்னுடைய தந்தை என்பதற்கான ஆவணங்களை நீதிமனறத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.3 ல் பரிமளத்தை 2-ம் பிரதிவாதி திருமணம் செய்துகொண்டதையும், அவர்களுக்கு 3 பிள்ளைகள் இருப்பதையும் ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரிதான். அவர்களை வழக்கு தாக்கல் செய்யும் போது தரப்பினராக சேர்க்கவில்லை. வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்புவதற்கு முன்பாக வில்லங்கம் போட்டு பார்க்கவில்லை. வில்லங்க சான்றிதழை பார்க்காமல் தாவா சொத்துக்கள் கிரையம் பெற்ற சொத்துக்கள், பூர்வீக சொத்துக்கள் என்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி வழக்க போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. பி அட்டவணை சொத்துக்கள் எல்லாமே 1-ம் பிரதிவாதி தனித்த உரிமையாளராக அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. நானும் எனது தாயாரும் தாவா சொத்துக்களில் சுவாதீனத்தில் இல்லாத நிலையில் நான் குறைவான நீதிமன்ற கட்டணம் கட்டி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 1, 2 பிரதிவாதியும் சேர்ந்து என்னையும் எனது தாயாரையும் வீட்டை விட்டு அடித்து வெளியே துரத்திவிட்டார்கள் என்று அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது நான் 2, 3 வயதாக இருக்கும் போது. நான் தாவா சொத்துக்களில் எந்த காலத்திலும் சுவாதீனத்தில் இல்லாத நிலையில் தற்போது சிறு வயதில் என்னை என் தாயாரையும் விரட்டிவிட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அப்படி விரட்டிவிட்டதால் நாங்கள் தாவா சொத்துக்களுக்கு 30 ஆண்டுகளாக நாங்கள் போகஇயலாமல் என் தாத்தா இறந்த பிறகு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 30 ஆண்டுகளாக நாங்கள் போகமுடியாமல் தற்போது இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளது காலவரையால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2-ம் பிரதிவாதியின் பிள்ளைகளுக்கு பாகம் உள்ளது என்று ஒப்புக்கொண்டுள்ள நிலையில் நான் கேட்டுள்ள பாகம் வீதம் தவறானது என்றால் சரியல்ல. 3-ம் பிரதிவாதி விஜயா கூட்டுகுடும்ப சொத்து சம்பந்தமாக என்ன பரிவர்த்தனைகள் செய்து கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. 2-ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிருரையில் தாவா சொத்துக்கள் இல்லாமல் வேறு சொத்துக்கள் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளது எனக்கு தெரியும். அந்த சொத்துக்கள் எளம்பலூர் கிராமத்தில் உள்ளது என்றும்

எனக்கு தெரியும். அந்த சொத்துக்களை இந்த தாவாவில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. முழுசொத்து விவரங்களை தாவாவில் சேர்க்காததால் தாவா நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. 1990 இறுதியிலேயே 2-ம் பிரதிவாதி 4-ம் பிரதிவாதி யை விவாகரத்து செய்ததால் தான் 2-ம் பிரதிவாதி பரிமளாவை திருமணம் செய்தது சம்பந்தமாக எந்த குற்றவியல் நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2-ம் பிரதிவாதியின் ஒரு மகன் ராஜரத்தினம் மனநலம் குன்றியவர் என்றால் சரிதான். ராஜரத்தினத்திற்கும் சொத்தில் பங்கு உள்ளது என்று ஒப்புக்கொள்கிறேன். ராஜரத்தினத்தை வழக்கில் சேர்க்காமலும், அவருக்கு பாதுகாவலர் நியமனம் செய்யாமலும் இந்த வழக்கு தாக்கல் செய்ததும் தொடர்ந்து நடத்துவதும் தவறு என்றும், தாவா தள்ளுபடி ஆக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. 27.05.2013 ல் எனக்கு திருமணம் நடந்தது. 1 முதல் 3 பிரதிவாதிகள் மற்றும் 1-ம் பிரதிவாதியின் கணவர் திருமணத்திற்கு வரவில்லை. ஜெயபிரகாஷ்ன் சட்டபூர்வ வாரிசுகள் பாலகிருஷ்ணன், ராஜரத்தினம், யோகேஷ்வரி மட்டுமே என்றால் சரியல்ல. 28.10.2017 ல் எனது தாயார் 2-ம் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். என்னுடைய திருமணத்திற்கு செலவு செய்ய பணம் வேண்டும் என்று அந்த அறிவிப்பில் கேட்கவில்லை. என் தாயாருக்கு பாகம் வேண்டும் என்று தான் கேட்டார்கள். அந்த விவரம் எனக்கு தெரியும். அந்த வழக்கறிஞர் அறிவிப்பை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்பந்தமாக எந்த விவரமும் தெரியாமல், 1-ம் பிரதிவாதியின் கணவர் இறந்த பிறகு சொத்தை அபகரிக்க வேண்டும் என்று எண்ணத்தில் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 2-ம் பிரதிவாதியின் சட்டபூர்வ வாரிசு என்றால் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்திருப்பேன் என்றும், நான் சட்டபூர்வ வாரிசு இல்லை என்பதால் தான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா அ அட்டவணை சொத்து 1,3 மற்றும் ஜெயபிரகாஷ்-ன் மனைவி பரிமளா மற்றும் மகன்கள் பாலகிருஷ்ணன், ராஜரத்தினம் மற்றும் மகள் யோகேஷ்வரி ஆகியோர்களுக்கு மட்டும் தான் பாத்தியப்பட்டது என்றும் தாவா இரண்டு அட்டவணை சொத்துக்களிலும் எனக்கு உரிமையில்லை என்று சொன்னால் சரியல்ல. ஜெயபிரகாஷ்ன் அப்பா ஆசிரியராக வேலை பார்த்தார்,. ஆசிரியராக வேலை பார்த்த பணத்தை வைத்து தான் சொத்து வாங்கினார் என்றால் சரிதான். ஜெயபிரகாஷ்ன் தகப்பனார் கிரையம் வாங்கிய சொத்துக்களில் நான் எந்த உரிமையும் கோரமுடியாது என்றால் சரியல்ல. ஜெயபிரகாஷ்ன் தகப்பனார் கிரையம் வாங்கிய சொத்துக்களில் வாரிசு உரிமை அடிப்படையில் தான் பாகம் பிரிக்க முடியும் என்றால் சரியல்ல. தாவா செலவுத்தொகையுடன்

தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. ஏற்கெனவே தாவா சொத்துக்கள் சம்பந்தமாக நடந்த பரிவர்த்தனைகளை ரத்து செய்ய கோராமலும் நான் கூட்டுசுவாதீனத்தில் இல்லாமல் சுவாதீனத்தில் இருப்பதாக காட்டி தாவா தாக்கல் செய்துள்ளதாலும், இந்த தாவா தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.